**ரத்தொட்ட பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 19 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 02 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ரத்தோட்ட பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ரூபா 15,248,801 பெறுமதியான 05 கட்டிடங்கள், 06 தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் வாகனம் என்பன மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டின் போது பிரதேச சபையை பலப்படுத்துவதற்கு உள்ளூராட்சி மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சிலிருந்து கிடைத்த பணத்தில் செலவிடப்படாத ரூபா 1,341,166 பணத்தை அவ்வமைச்சிற்கு மீண்டும் அனுப்பும் போது கடன் கொடுத்தோர் மீதிக்கு சீராக்கம் செய்யப்படாததன் காரணமாக மூலதனச் செலவினம் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 4,189,208 ஆன பெறவேண்டிய முத்திரைக் கட்டண வருமானம், ரூபா 3,419,291 ஆன மூலதன மானியம் மற்றும் ரூபா 924,426 ஆன மூலதனச் செலவினம் என்பன குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஈ) 06 கட்டிடங்களுக்கும் நூலகப் புத்தகங்களுக்கும் உரிய ரூபா 1,475,287 கூட்டுப்பெறுமதியான மீதி கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்குரித்தாக ஓய்வூதிய திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 78,094 பங்களிப்புத் தொகை நிதிக்கூற்றுக்களில் விடுபட்டிருந்தது.

(ஊ) 2 வரவுத் தலைப்புகளுக்குரிய ரூபா 2,002,950 கூட்டுத்தொகையான மீண்டெழும் வருமானம் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) 2015 யூலை 03 ஆந் திகதி சீஎல்/எம்எல்/பீ/ஆர்பிஎஸ்/05/14/38 ஆம் இலக்க கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் 2.2.1 ஆம் பந்தியில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 24,201,851 கூட்டுத்தொகையான 03 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகளுக்கும் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 367,665 கூட்டுத்தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 தொங்கல் கணக்குகள்

18 வருடங்கள் முதல் மாற்றமின்றி முன்கொண்டு வரப்படுகின்ற ரூபா 15,462 தொகையான தொங்கற் கணக்கு மீதியை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கிடைக்க வேண்டிய கணக்குகள்

கிடைக்க வேண்டிய 10 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 28,839,421 ஆக இருந்ததுடன் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தை விஞ்சிய ரூபா 1,744,225 கூட்டுத்தொகையான மீதியொன்று அதில் உள்ளடங்கியிருந்தது.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

செலுத்த வேண்டிய 04 கடன்கொடுத்தோர் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 20,293,580 ஆக இருந்ததுடன் 05 வருட காலத்தை விஞ்சிய ரூபா 2,144,087 தொகையான மீதிகள் அதில் உள்ளடங்கியிருந்தன.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

06 கணக்கு விடயங்களுக்குரிய போதியளவு சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 102,728,372 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

### 1.3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

கீழே காண்பிக்கப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங் களு டனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 219(i) ஆம் பிரிவு | ரத்தொட்ட பிரதேச சபையின் முன்னால் தலைவரால் தாம் அங்கத்துவத்தினை கொண்டிருக்கும் ரத்தொட்டை சமூர்த்தி உத்தியோகத்தர்களின் நலன்புரி சங்கத்திற்கு ரூபா 1,392,355 தொகையான 15 ஒப்பந்தங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 | 1987 இன் பின்னர் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 756 | 2015 ஆம் ஆண்டிற்காக பொருளிப்பு பொருட்கள், களஞ்சியப் பொருட்கள் மற்றும் ஆயுர்வேத இருப்பு தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2010 பெப்ரவரி 03 ஆந் திகதிய எஸ்பீ/ஆர்டீ/02/10 ஆம் இலக்க அரசின் காணி முகாமைத்துவ தலைப்பிலான ஜனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் 3.5 ஆம்ந பந்தி | உள்ளூராட்சி மன்றங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள காணிகளின் உரித்தினை அனுபவிக்கும் உரிமை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உள்ளதாகவும் காணியின் முழுஉடமை அரசாங்கத்திடம் இருப்பதாகவும் அவ்வாறான காணியை மூன்றாம் தரப்பினருக்கு கையளிக்க முடியாதென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்கு இணங்காத வகையில் சபையின் ஆதனங்களில் அனுமதியற்ற 2 கடைகள் நிர்மாணிப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தன. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,254,378 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,540,055 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 6,714,323 அதிகரிப்பைக் காண்பித்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 ஆதன வரி

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த ஆதன வரி மீதி ரூபா 795,607 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் 01 முதல் 05 வருட காலத்திற்குரிய விஞ்சிய ரூபா 779,748 தொகையான மீதிகளும் உள்ளடங்கியிருந்தது.

### 2.2.2 ஏக்கர் வரி

நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 327,814 ஆக இருந்ததுடன், அந்த மீதியில் 01 முதல் 05 வருட காலத்திற்குரிய ரூபா 287,449 தொகையான மீதியும் உள்ளடங்கியிருந்தது.

### 2.2.3 நீர்க் கட்டணம்

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்திலான ரூபா 5,445,708 நிலுவை மீதிகளில் ரூபா 2,312,546 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன், அது மொத்த நிலுவையில் 42 சதவீதமாக இருந்தது. ஆண்டின் இறுதியில் நிலுவை நீர்க் கட்டண மீதி ரூபா 5,902,553 அளவிலான கூடிய பெறுமதியைக் கொண்டிருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டு வரையில் 3777 நீர்ப் பாவனையாளர்களுக்கு நீர் வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் 52 நீர்ப் பாவனையாளர்களுக்கு மாத்திரமே நீர்மானிகள் பொருத்தப்பட்டிருந்தன. எஞ்சிய 3725 நீர்ப் பாவனையாளர்களிடமிருந்து முறையான நடைமுறையொன்று பின்பற்றப்படாமல் மாதாந்தம் ரூபா 200, ரூபா 300, ரூபா 500, ரூபா 750 மற்றும் ரூபா 1,200 என்ற அடிப்படையில் இல்லாமல் கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தன.

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

4 வருட காலமாக இருந்து வரும் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மீதி ரூபா 408,685 ஆக இருந்தது.

### 2.2.5 நிலுவை வாடகை

நிலுவை வாடகை மீதி ரூபா 594,548 ஆக இருந்ததுடன், அந்த மீதியில் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட ரூபா 459,702 ஆன நிலுவை மீதியும் உள்ளடங்கி இருந்தது.

### 2.3.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 6,973,995 தொகையும், முத்திரைக் கட்டணமாக ரூபா 1,967,565 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தன. நிலுவை முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட்டுள்ளதாக 2016 யூலை 07 ஆந் திகதி செயலாளர் எனக்கு அறிக்கையிட்டிருந்தார்.

### 2.3 மிகை அறவீடு

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகைக் கட்டணங்களுக்குரிய ரூபா 10,220,657 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

(அ) சபைக்குச் சொந்தமான 152 காணிகளில் 06 காணிகளுக்கு மாத்திரம் கையளிப்பு கட்டளைகள் வழங்கப்பட்டிருந்ததுடன், அனைத்து உறுதிகளுக்கும் சட்டரீதியான

உரித்தினைக் பெற்று உரித்தினை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1995 திசெம்பர் 27 ஆந் திகதிய 95/9 ஆம் இலக்க மாகாண தலைமை செயலாளரின் கணக்குகள் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் இடமாற்றம் பெற்றுச் சென்ற, சேவையிலிருந்து வரிதாகிச் சென்ற மற்றும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 435,073 தொகையான நிலுவைக் கட்டண மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கடன்பட்டோர் மீதியில் 2000 ஆம் ஆண்டிலிருந்து 2013 வரை காலப்பகுதிக்குரியதாக காணப்பட்ட ரூபா 2,624,047 ஆன மீதிகள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1999 ஆம் ஆண்டிலிருந்து 2013 வரையான காலப்பகுதிக்குரிய தீர்க்கப்படாதிருந்த முற்பண மீதியான ரூபா 414,687 தொகையை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கடன்கொடுத்தோர் மீதியில் 2006 ஆம் ஆண்டிலிருந்து 2013 வரை காலப்பகுதிக்குரியதாக காணப்பட்ட ரூபா 5,541,919 ஆன மீதிகள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2014 ஆம் ஆண்டில் பிரதேச சபை பொது நிதியின் கீழ் ரூபா 1,539,878 செலவு செய்து ஜனக பண்டார தென்னகோன் மாவத்தையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 07 கடைகளுக்கு முறையான கேள்வி நடைமுறையிலிருந்து விலகி ஆட்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

(எ) சபையின் வருமான காப்பாளர் பதவியில் வெற்றிடங்கள் இல்லாதிருக்கையில் 40 சதவீத தரகு அடிப்படையில் ஊழியர் ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டு ரூபா 71,691 ஆன தரகுப்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஏ) 21 மிகை ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் நாளாந்த சம்பள மற்றும் படிகள் கொடுப்பனவு அடிப்படையில் 07 பேரை சேவையில் ஈடபடுத்தியிருந்தமை மற்றும் அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்காக 4 ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு நிரந்தர நியமனம் வழங்கலும் இடம்பெற்றிருந்தது.

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

அபிவிருத்தி நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக உறுப்பினர்களுக்கு மோட்டார் சைக்கில்கள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 05 உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 250,000 கடன் தொகை அவர்களின் மாதாந்த படிகளிலிருந்து கழிக்கப்பட்டு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3. சொத்துக்கள் முகாமைத்துவம்

#### விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத ரூபா 1,661,900 கிரயமான 9 வாகனங்கள் ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ திருத்தம் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்க படாதிருந்ததுடன் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட ரூபா 213,000 பெறுமதியான 2 நிழற்பட பிரதி

இயந்திரங்களையும் ரூபா 106,000 பெறுமதியான ரோனியோ இயந்திரமொன்றையும் பாவனையிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டிலிருந்து இரத்தோட்டை மாத்தளை பிரதான வீதியை விரிவுபடுத்தும் போது புதிதாக நீர்க்குழாய்கள் பொருத்துவதற்காக ரூபா 1,950,000 பெறுமதியான நீர்க் குழாய் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 421,240 ஆன உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் கேட்போர் கூடத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

### 3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பிரதேச சபையின் மக்கள் பிரதிநிதிகளின் பதவிக்காலம் 2015 மே 15 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும், மே மாதத்திற்கான உறுப்பினர் எரிபொருள் படிகள் என்பன முழு மாதத்திற்கும் செலுத்தப்பட்டமையால் ரூபா 12,500 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.5 இனங்காணப்பட்ட நட்டம்

1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 10(1) மற்றும் (2) ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புத் தொகை த்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் 2001 - 2012 காலப்பகுதிக்குரிய பங்களிப்புத் தொகையை அனுப்புவதற்கு தாமதம் ஏற்பட்ட காரணத்தினால் ரூபா 79,587 மிகை கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

### 3.6 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற 2 மெட்ரிக் தொன் அளவான கழிவுப் பொருட்களை சபையின் 2 உழவு இயந்திரங்களையும் 07 ஊழியர்களையும் ஈடுபடுத்தி சேகரிக்கப்பட்டு அதில் வேறாக்கப்பட்ட கழிவுப் பொருள் 600 கிலோகிராம் அளவு குவித்து வைக்கும் முறை மூலம் உக்கியதன் பின்னர் கூட்டுப்பசளை உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. சேகரிக்கப்பட்ட பசளையில் கூட்டுப்பசளை உற்பத்திக்காக பயன்படுத்தப்படாத 40 சதவீத அளவு மீள் சுழற்சிக்கு அனுப்பப்படாது சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதீடு திருத்தத்திற்கு உள்ளாக்கப்பட்டதன் பின்னர், பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான செலவினங்களுக்கிடையே கீழே விபரமாகக் காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் கவனத்தில் கொள்ளக்கூடிய அளவில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்க பூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(அ) 04 வருமான விடயங்களில் 36 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையிலான வீச்சில் இலக்கிடப்பட்ட வருமானம் உழைக்கப்படாதிருந்ததுடன் மேலும் 13 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை மிகைத்து 52 சதவீதம் முதல் 664 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

(ஆ) 15 செலவின விடயங்களுக்கான ரூபா 2,864,772 தொகையான மொத்த நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் 27 செலவின விடயங்களின் தேறிய

நிதியேற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்குமிடையே 40 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

1988 இன் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவை 5(7) விதியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு முறைமை ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் சிபீசீ/சீஎல்ஜீ/1/9/1/4 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிர்வாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) மனித வள முகாமைத்துவம்